402

402

Reg. No. M. 1354

போதனு விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.



கொத்து 30

மலர் 12

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 ஜூன் 1940

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

... 1. தனிப்பிரதி அணு 1½.

3C
ma1, N11PP.
N40.30.12
182246

16 JUL 1940
MADRAS

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	249
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதிகளின் சாராம்சம்	250
3.	Results of the T. S. L. C. Examinations, March 1940	251
4.	காவியத்தில் ஓவியம்	253
5.	தாய்மொழி கற்பிக்கும் சுருக்க முறையின் சுருக்கம்	255
6.	பாடக் குறிப்பு	258
7.	மிஸ்டர் கருடன் செய்த கபடச்செயல் ...	262
8.	யானையைப்பற்றிய பழமொழிகள்	264
9.	கல்வித் துறையில் கற்கும் கைவேலைகள் ...	265
10.	இயற்கைப் பாடம்: ரப்பர்	271
11.	பள்ளி பால ஸங்கீதம்	273
12.	மதிப்புரை	276
13.	மீசையால் ஆசிரியர் தற்கொலை	277
14.	முதலாவது ஆண்டு விழா 1940	278
15.	ஆரம்ப ஆசிரியர் யூனியன்	279

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனாவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனாவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனாமுறைப் பாடசாலை, திருச்சி.

“பாலர் சன்மார்க்க வாசகம்”

புதிய புத்தகம்! புதிய புத்தகம்!!

பாலர் யாவரும் படிக்கத்தக்க புத்தகம்!

பெற்றோரும் மற்றோரும் பார்க்கவேண்டிய புத்தகம்.

பக்கம் 28 விலை 9 பைசா

தபாற் செலவு 6 பைசா

புத்தகம் கிடைக்குமிடம் :—

அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீஸ்,

கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி.

16 JUL 1940

சமூக தர்மம் புதிய புத்தகம்

மாந்தர் பலர் நிலையாகச் சேர்ந்து வாழ்வது சமூகமெனப்படும். குடும்பம் சமூகத்தின் அஸ்திவாரம், அரசாங்கம் அதன் சிகரம். உலகில் தோன்றும் சகல மனிதரிடமும் சமூக உணர்ச்சி இயற்கையாக அமைந்துளதால் இவ்வுணர்ச்சியை நல்வழிப்படுத்த அவரவர் தத்தம் உரிமையையும், கடமையையும் அறிதல் வேண்டும். உறவினருள் விளங்கவேண்டிய ஒழுக்கமுறையை விவரிப்பது குடும்ப தர்மமென்றும் ஆட்சி முறையில் அனுஷ்டிக்கவேண்டியவைகளைப் புகட்டுவது இராஜ தரும மென்றும், எஞ்சிய விஷயங்களை விளக்குவது சமூக தர்மமென்றும் அறிவாளிகள் பாகுபாடுசெய்வது சகஜம். எனினும் இந்நூலில் சமூக தர்மமென்று குறிப்பிடுவது அவரவர் பிழைப்புக்காக உழைக்கும் முறையில் கொள்ளும் உரிமையும் கடமையுமே.

தற்சமயம் பொதுவுடைமைவாதிகள் உலகில் தரித்திரத்தைத் தீர்க்கவும், தர்மத்தை நாட்டவும் பல்வேறு உபாயங்களைப் போதித்துவருகின்றனர். அன்னோரது போதனையில் குணம் இன்னது குறை இன்னதென்று பகுத்தறிய வேண்டுமாயின் தொழில் முறையில் மாந்தருடைய கடமைகளைக் கண்டுணர்வது அவசியம். இதை விவரிப்பதே இந்நூலின் நோக்கம்.

Crown 8vo—96 பக்கங்கள் உள்ளது. விலை அணா 4.

தபாற் செலவு ... ... 0—1—9

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசில் கிடைக்கும்.

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	249
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதிகளின் சாராம்சம்	250
3.	Results of the T. S. L. C. Examinations, March 1940	251
4.	காவியத்தில் ஓவியம்	253
5.	தாய்மொழி கற்பிக்கும் சுருக்க முறையின் சுருக்கம்	255
6.	பாடக் குறிப்பு	258
7.	மிஸ்டர் கருடன் செய்த கபடச்செயல் ...	262
8.	யானையைப்பற்றிய பழமொழிகள்	264
9.	கல்வித் துறையில் கற்கும் கைவேலைகள் ...	265
10.	இயற்கைப் பாடம்: ரப்பர்	271
11.	பள்ளி பால ஸங்கீதம்	273
12.	மதிப்புரை	276
13.	மீசையால் ஆசிரியர் தற்கொலை	277
14.	முதலாவது ஆண்டு விழா 1940	278
15.	ஆரம்ப ஆசிரியர் யூனியன்	279

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணு ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனமுறைப் பாடசாலை, திருச்சி.

"பாலர் சன்மார்க்க வாசகம்"

புதிய புத்தகம்! புதிய புத்தகம்!!

பாலர் யாவரும் படிக்கத்தக்க புத்தகம்!

பெற்றோரும் மற்றோரும் பார்க்கவேண்டிய புத்தகம்.

பக்கம் 28 விலை 9 பைசா

தபாற் செலவு 6 பைசா

புத்தகம் கிடைக்குமிடம்:—

அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீஸ்,

கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி.

16 JUL 1940

சமூக தர்மம் புதிய புத்தகம்

மாந்தர் பலர் நிலையாகச் சேர்ந்து வாழ்வது சமூகமெனப்படும். குடும்பம் சமூகத்தின் அஸ்திவாரம், அரசாங்கம் அதன் சிகரம். உலகில் தோன்றும் சகல மனிதரிடமும் சமூக உணர்ச்சி இயற்கையாக அமைந்துளதால் இவ்வுணர்ச்சியை நல்வழிப்படுத்த அவரவர் தத்தம் உரிமையையும், கடமையையும் அறிதல் வேண்டும். உறவினருள் விளங்கவேண்டிய ஒழுக்கமுறையை விவரிப்பது குடும்ப தர்மமென்றும் ஆட்சி முறையில் அனுஷ்டிக்கவேண்டியவைகளைப் புகட்டுவது இராஜ தரும மென்றும், எஞ்சிய விஷயங்களை விளக்குவது சமூக தர்மமென்றும் அறிவாளிகள் பாகுபாடுசெய்வது சகஜம். எனினும் இந்நூலில் சமூக தர்மமென்று குறிப்பிடுவது அவரவர் பிழைப்புக்காக உழைக்கும் முறையில் கொள்ளும் உரிமையும் கடமையுமே.

தற்சமயம் பொதுவுடைமைவாதிகள் உலகில் தரித்திரத்தைத் தீர்க்கவும், தர்மத்தை நாட்டவும் பல்வேறு உபாயங்களைப் போதித்துவருகின்றனர். அன்னோரது போதனையில் குணம் இன்னது குறை இன்னதென்று பகுத்தறிய வேண்டுமாயின் தொழில் முறையில் மாந்தருடைய கடமைகளைக் கண்டுணர்வது அவசியம். இதை விவரிப்பதே இந்நூலின் நோக்கம்.

Crown 8vo—96 பக்கங்கள் உள்ளது. விலை அணா 4.

தபாற் செலவு ... ... 0—1—9

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசில் கிடைக்கும்.

நல்லொழுக்கம்

(By Bishop Roche)

இதில் சுகவழி, அன்னபானம், நித்திரை, நடையுடை பாவனை, உண்மையுடைமை, பேசும் வகை, குடும்பம், பள்ளிக்கூடம், சிநேகம், காகிதம் எழுதும் வகை, உத்தியோகம் இவைகளைச் சார்ந்த விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் எத்திறத்தாருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்கே பிரயோஜனமும் அவசியமுமானது. வெகு காலமாக Middle School-களிலும், Elementary School-களிலும் இவற்றைப் பாடப் புஸ்தகமாக உபயோகித்துவருகிறார்கள்.

(13-ம் பதிப்பு)

82 பக்கங்களடங்கியது அணா 3.

தபாற் செலவு 0-1-3.

திவ்விய சேசுவின் திருச்சரிதை

3-ம் பதிப்பு

96 பக்கங்களடங்கியது

கர்த்தர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உத்தானம், பரலோக ஆரோகணம், திருச்சபை ஸ்தாபகம், அவர் செய்தருளிய புதுமைகள், அளித்தருளிய ஆத்தும சரீர நன்மைகள், அவரது பிரசங்கம், உவமைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வோர் பாடத்தில் விவரித்திருப்பதால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகமாக இயற்றியிருக்கிறது. நமது பரிசுத்த ஆண்டவரின் ஜீவிய சரிதையை அறிய விரும்பும் பெரியோர், புதுக்கிறீஸ்தவர், இதர மதஸ்தர் இந்நூலை வாசித்து அபரிமிதமான பலனடைவார்கள். விலை அணா 3.

தபாற் செலவு 0-1-9.

வேத சத்தியங்கள்

இச் சிறு புஸ்தகத்தில் மனிதன் ஆத்தும இரட்சண்யம் அடைவதற்காக விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள், அநுசரிக்கவேண்டிய தேவ கட்டளைகள், இரட்சண்யம் அடைவதற்கு உதவியான வழிபாடுகள் எளிதான வியாக்கியானங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் குருவானவர் இல்லாத கோவில்களிலே, பூசை மந்திரம் சொல்லும்போது, இச்சிறு புஸ்தகத்தில் அடங்கியிருக்கிற பிரதான சத்தியங்களை வாசிப்பது வெகு பிரயோசனமாயிருக்கும்.

(Fl. $\frac{1}{8}$—7-ம் பதிப்பு) 168 பக்கங்கள் அணா 5.

செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சினாப்பள்ளி.

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து **30**] **15 ஜூன் 1940** [மலர் **12**

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1940 : சென்ற மார்ச்-மீ நடைபெற்ற T. S. L. C. பரீட்சை எழுதின எமது 37 செக்கண்டரி கிரேடு மாணவர்களில் 33 பேர் (90%) தேறியுள்ளார்கள். (*Vide* Fort St. George Gazette Part I. B. dated 28-5-1940) இதன் விவரத்தை மற்றோரிடத்திற் காண்க.

சாதாரணமாக General Principles என்னும் பாடம் கடினமானதென்று கருதப்படுவது சகஜம். இவ்வருஷம் முன் வருஷங்களைப்போலல்லாமல் இக்கடினமான பாடத்தில் நம் மாணவர்கள் எல்லோரும் (cent per cent) தேறியிருப்பது மெச்சத்தக்கதே. ஆனால் சுலபமான பாடமெனக் கருதப்படும் சித்திரப் பாடத்தில் (Drawing) நம் பள்ளியில் தேறாத மூவரும் இப்பாடத்தில் தவறினதைப்பற்றி வருந்துகிறோம்.

எலிமெண்டரி ஹையர் கிரேடு பரீட்சை முடிவைப்பற்றி கெஜட்டில் பிரசுரமானவுடன் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

* * *

இவ்வருஷம் பரீட்சை எழுதிச்சென்றுள்ள மாணவர்களும், சென்ற வருஷம் பயின்று சென்றவர்களும், ஏனைய பழைய மாணவர்களும் இப்பாடசாலைத் தலைமையாசிரியருக்கு அனுப்ப வேண்டிய ஆறுமாத ரிப்போர்ட்டை ஒழுங்காய் அனுப்பிவரும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதன் முக்கியத்தை அவர்கள் கவனிப்பார்களாக. இதுவரை வேலை கிடைக்காதவர்கள் கூட அவ்விஷயத்தைக் குறித்து இப்பாடசாலைத் தலைமையாசிரியருக்குத் தெரியப்படுத்துவதும் அவசியமாகும்.

சென்னை கல்வி இலாகா
திருத்த விதிகளின் சாராம்சம்

[Fort St. George Gazette, Part I. B. pp. 482, dated 4th June 1940.]

டீச்சிங் கிராண்டு: இதுவிஷயமாய் பின்வரும் விதியை இனிமேலாக அனுசரித்து கிராண்டு வழங்கப்படும்:—

ஒரு பாடசாலை வேலை செய்யும் நாளில் 5 மணி நேரத்திற்குக் குறைவாக, குறிக்கப்பட்ட பாடங்களில் போதனை நடைபெறுமாயின், அந்த நாளுக்கு கிராண்டு கணக்கிடும்போது பாதி ரேட்டுதான் கணிக்கப்படும். $2\frac{1}{2}$ மணி நேரத்திற்குக் குறைந்தால் அந்தப் பாதி ரேட்டும் இல்லை.

* * *

எனவே முழு ரேட் கிராண்டு கிடைக்கவேண்டுமாயின் ஒரு பாடசாலை தினத்தில் 5 மணிக்குக் குறையாமல் பாடபோதனை அமையவேண்டுமென்பது தெளிவாகின்றதன்றோ?

TL
[illegible]
M40·30·12

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின்
முன்னேற்றத்துக்கு உழைத்துவரும்
ஓர் மாதாந்தரப் பத்திரிகை

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்,

94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
182293

Results of the T. S. L. C. Examinations, March 1940

R. C. Boarding and Training School, Secondary Grade

PASSES

Reg. No.	Name of Candidate (date of birth)	Com.	1938-40	P. C.
10901	A. Nargunam (Oct. 1919)	C	S.S.L.C.	51
10902	V. Viswanathen (January 1919)	B	„	51
10903	D. Masillamony (July 1915)	C	„	46
10905	R. Rajamanikam (June 1919)	H	„	54
10907	A. Susaiappan (March 1914)	C	„	48
10908	S. Swaminathan (March 1921)	B	„	44
10909	T. A. Susai Vaithia Cruz (June 1916)	C	„	35
10910	S. Louis Antony (March 1922)	C	„	49
10911	M. Susaimarian (July 1915)	C	„	39
10912	S. T. Thangiah Arulanandam (July 1917)	C	„	49
10913	A. Rayappan (August 1921)	C	„	47
10914	S. D. Michael Gnanadurai (Sept. 1919)	C	„	56
10915	I. Dhanaraj (June 1920)	C	„	46
10916	M. Gnanasamy (April 1911)	C	„	42
10917	R. Natarajan (July 1918)	B	„	43
10918	S. Subramanian (July 1906)	H	„	37
10919	M. Ambrose (July 1912)	C	E.S.L.C. (Travancore)	51
10920	K. Vadivelu (November 1922)	H	S.S.L.C.	57
10921	A. Maria Jegam (October 1917)	C	„	49
10922	K. Subbiah alias Francis (April 1915)	C	„	47
10923	M. Motchamarian (October 1920)	C	„	53
			1939-40	
10925	T. Selvamariyan Fernando (July 1916)	C	Int. Parts 2 & 3	41
10926	M. Chinnappan (June 1916)	C	Intermediate	51
10927	P. Mathurbutham (May 1918)	H	Int. Part 2	47
10929	Y. G. Ramanathan (June 1917)	C	Intermediate	44

Reg.	Name of Candidate (date of birth)	Com.		P. C.
			1939-40	
10930	K. Venkataraman (July 1915)	B	Int. Part 2	47
10931	D. S. Subramanyam (July 1896)	B	S.S.L.C.	48
10932	P. R. Subramanian (March 1919)	B	Int. Parts 2 & 3	52
10933	N. Krishnarathnam (October 1912)	B	Intermediate	47
10934	C. Bernardin (May 1907)	C	Intermediate	45
10935	G. Abraham (April 1910)	C	Int. Parts 1 & 2	42
10936	S. Venkata Rao (June 1917)	B	Intermediate	42
10937	S. Ramiyan (January 1912)	H	Intermediate	42

Old Pupils

Reg.	Name of Candidate (date of birth)	Com.		P. C.
			1938-39	
10938	J. Rajaram Rao (December 1913)	B	Int. Part 2	38
			1933-34	
10942	A. G. Balasubramanyan (Nov. 1912)	B	Int. Parts I & 2	35
			1936-38	
10943	N. V. Srikantan (Nov. 1916)	B	S.S.L.C.	41
			1938-39	
11222	K. A. Savarimuthu (Sept. 1912)	C	Int. Part 2	42

FAILURES

Reg. No.	Name of Candidate	Subject in which Failed
		1938-40
10904	K. Subramanian	Drawing & Blackboard Work.
10906	N. Krishnaswami	" "
10924	M. Yagoo	Methods of Teaching Subjects
10928	T. S. Krishnamurti	Drawing & Blackboard Work

Old Pupils

Reg. No.	Name of Candidate	Subject in which Failed
		1937-38
10939	M. Subramanyan	General Principles & Drawing & Blackboard Work
10940	K. Alagiyamanavalan	General Principles & Methods of Teaching
		1935-36
11223	Ambrose A. Ranjitraj	Methods of Teaching
10941	S. M. Pasupathy	"

காவியத்தில் ஓவியம்

M. A. S. Udayar, Tamil Pandit.

(கொத்து 30. மலர் 10, 11, 224-ம் பக்கத்தொடர்ச்சி)

சென்ற இதழில் நம் கவியரசரின் ஓவியத்துள் ஒன்றை யாராய்ந்தோம். அவ்வாராய்ச்சியைப் பின்பற்றியே யிவ்விதழி லும் ஓரோவியத்தை யாராய்வாம்.

ஓவியப்புலவர் தாம் எழுதிய ஓவியத்தை நேரிற் கண்ணுறு வார்க்கே இன்பமளிக்கின்றார். ஆனால் நம் கவியோவியரோ வெனில் கேட்டார்க்கும் இன்பமளிக்கின்றார். எனவே—கவி யோவியம், கட்புலன், செவிப்புலன் ஆய இரு பெரும்புலன்கட் கும் இன்பம் பயப்பதாம்.

எனவே, ஓவியன் தனது ஓவியத்துள் பொருள்களின் தோற்றப்பொலிவை விளக்க இயலுவதன்றி அப்பொருள்களின் வாய்ப்புலன்களினின்றும் போதரும் இன்னோசையை யெழுதிக் காட்டலியலாததொன்றன்றே. ஆனால் நம் கவியோவியர் தாங் காணும் பொருள்களின் இயற்கையுருவமைப்பையேயன்றி அவற்றின் ஒலியையும் மிக எளிதாகவும், மிக்க நன்றாகவும் வரைந்த ஓர் கவிச்சித்திரத்தை நாம் காண்பாம்:—

நம் கவியரசர் கண்ணில் காணலுற்றது ஓர் சோலை. அச் சோலையினுள், காடைப்புட்களும், மயிலினங்களும், புறவினங் களும் அச்சோலையின் வளத்தை நுகர்ந்து இன்னொலி செய் கின்றன. இவை:

> கரு கருவென வொர்பால் காடைப்புள்ளினும்
> ஞரு ஞருவென வொர்பால் நயந்த தோகைகள்
> புரு குரு வுதலொடு புட்பல் ஓதையால்
> அரு துரு வுணர்வுறு மாங்கஞ் சோலையே.

இதன் பொழிப்புரை வருமாறு:—

ஒரு பக்கத்தில் கருகருவென்றொலிக்கும் காடையொலி யும் மற்றோர் பக்கத்தில் ஞருஞருவென்று ஒலிக்கு மயிலொலி யும் வேறோர் இடத்துள் குகூ குகூவெனக் குறுவும் புறவொலி யும் இடையறாது நிகழ்கின்றமையின் இச்சோலை ஓர் கணக்காய னால் நடத்தப்பெறும் பள்ளிக்கூடத்தை (கல்விக்கழகத்தை) நிகர்க்கும் என்பது. இச்சித்திரத்துள், காவைக்கலை பயிலிட

மாகவும், காடை மயில் புறவாதியவற்றைக் கல்விபயில் இளஞ் சிறுராகவும்; புள்ளொலியை மாணவர் கல்வி பயிலோசையாக வும் சித்திரித்துக் காட்டியதுடன், மயிலினத்தைச் சுட்டு முகத் தான் அக்காலத்திலேயே யிக்காலத்துச் சீர்திருத்தக்காரர் விரும்பும் இருபாலினரும் ஒருபாற் பயிலும் சாலையையு மமைத்து முன்னோர் முறைமாறுமைப்பொருட்டு அவ்விருபாலி னரும் தனித்தனி பயிறல் சால்புடைத்தென்பதை, ஓர்பால், ஓர்பால் விளக்கிய தன்மை ஆயந்து வியத்தற்குரியதன்றோ?

(தொடரும்.)

சிறந்த சிறு விளையாட்டுகள்! உயர்ந்த விஷயங்கள்!!

ஆங்கிலத்திலும் எளிய தமிழ்நடையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன!!!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாதது

"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

துரைத்தனத்தாரின் சீர்திருத்த முறைப்படி விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும். நவீன அபிநய விளையாட்டுகள்.

போதனுவிஷய பூங்கொத்து சந்தாதார்களுக்குமட்டும் இரு புத்தகங்களும் சேர்ந்து ரூ. **1-4-0**-க்குக் கொடுக்கப்படும். தபால்கூலி 3 அணு பிரத்தியேகம். V.P.P.-யிலும் அனுப்பலாம்.

மற்றவர்களுக்கு இரு புத்தகங்களும் ரூ. **1-8-0**-க்குக் கொடுக்கப்படும்.

ஒரே தடவையில் 6 புத்தகங்களுக்குமேல் வாங்குகிறவர் களுக்கு தபால் கூலி இனும். 12 புத்தகங்கள் வாங்குபவருக்கு 1 புத்தகம் இனும்.

தனிப் பிரதி ரூ. **0-12-0**.

ஏஜண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விவரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—**Mr. V. M. JOSEPH,**
Author and Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

தாய்மொழி கற்பிக்கும் சுருக்க முறையின் சுருக்கம்

(T. S. G.)

பாஷையைக் கற்றலில் இரண்டு முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன: ஒரு விஷயத்தைப் படித்து, கிரகித்து அறிந்துகொள்ளல் ஒன்று; அதை வெளிப்படுத்துதல் அல்லது எடுத்துக் கூறுதல் மற்றொன்று.

பிறர் சொல்லக்கேட்டு அறிந்துகொள்ளுதலோ அல்லது தானாகவே படித்துத் தெரிந்துகொள்ளுதலோ கிரகித்துக்கொள்ளுதல் எனப்படும். வெளிப்படுத்தல் என்பதில் திருத்தமாயும் தெளிவாயும் கருத்து விளங்கும்படியும் விஷயத்தை எடுத்துக் கூறுதல் அடங்கும். எனவே இப்போதனையில் (1) வாசித்தல் (2) எழுதுதல் (3) பேசுதல் ஆகியவற்றை ஆராயவேண்டும்.

வாசித்தல்: சாதாரணமாக "எழுதப்படிக்கத் தெரிந்தவன்" (Literate) என நாம் ஒருவனைப்பற்றிக் கூறும்போது அவனிடத்தில் இருக்கவேண்டிய திறமைகள் என்ன என்பதை ஆராய்வதே வாசித்தலின் நோக்கங்களிலும் அமையும். அவை யாவன:—

1. அச்சுப்பிரதிகளிலுள்ள விஷயத்தையும், பின்னர் கையெழுத்துப் பிரதிகளிலுள்ளவற்றையும், தெளிவாய்க் கருத்து விளங்கும்படி வாசிக்குந்திறமை விருத்தியாதல்.

2. தொடர் வாக்கியங்கள் அல்லது பிரகாணங்களிலுள்ள (Paragraphs) விஷய சாராம்சத்தை எடுத்துக்கூறும் சக்தி வளர்ந்து வருதல்.

3. படித்த விஷயத்தை ஆராய்ந்துபார்த்து அதிலுள்ள குணதோஷங்களைக் கண்டறியும் திறமையைப் படிப்படியாய் வளர்த்துவருதல்.

4. பாடசாலைப் படிப்பை நிறுத்தினபோதிலும் அறிவு வளர்ச்சிக்குப் புத்தகப்படிப்பின் அவசியத்தையுன்னி, படிப்பை மேலும் மேலும் தொடர்ந்து படிப்பதில் அவா உண்டாகுதல்.

ஷை நோக்கங்களை நிறைவேற்ற, கீழ்வரும் முறை போன்றவற்றைக் கையாளத்தகும்:—

I நிலை (I, II வகுப்புகள்) பொருள்களைச் சம்பந்தப்படுத்தி வார்த்தைகளைக் கண்டுபிடித்தல்—இதில் உச்சரிப்பும் எழுத்துக்களும் நிர்ணயமாகவேண்டும். அதாவது சுலபமான வார்த்தைகளைப் படிப்படியாய்க் கண்டுபிடிக்கத்தக்க ஒரு சௌகரியமான

வரிசைக்கிரமத்தை யனுசரித்து எழுத்துக்களை வார்த்தைகள் மூலம் கற்பிக்கவேண்டும். கற்றுக்கொண்ட பழைய எழுத்துக்களுடன் புது எழுத்துக்களை ஒவ்வொன்ருய்ச் சேர்த்துக் கொண்டே போகவேண்டும்.

பழைய வார்த்தைகளைக்கொண்டு தொடர்மொழிகளையும், சிறு சிறு வாக்கியங்களையும் அமைத்துக் கற்றுக்கொடுக்கவேண்டும். இவ்விஷயமாய் தயாரிக்கப்பட்ட படங்கள், அட்டைகளில் வெட்டியெடுத்த எழுத்துக்கள் (Cut letters in card-board) முதலிய நவீன சாதனங்களைக் கையாடவேண்டும்.

எழுத்துக்கூட்டி வாசிக்கும் பழைய வழக்கம் அறவே ஒழியவேண்டும். அதற்குப் பதிலாக வார்த்தைகளைப் பார்த்த மாத்திரத்திலேயே வாசிக்கும்படியான (Flash reading) திறமையை உண்டாக்கவேண்டும். இதை நிறைவேற்ற

(1) தயாரிக்கப்பட்ட எழுத்து அட்டைகளைப் பிரயோகித்தல் (Flash reading cards) மிகவும் உதவியாயிருக்கும். அவற்றில் கிரமப்படி வார்த்தைகள், தொடர்மொழிகள், சிறு வாக்கியங்கள் முதலியன படிப்படியாய் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) வார்த்தையை க. ப.-வில் எழுதி, பிள்ளைகள் பார்க்காதபடி அதை அட்டையால் மூடியபின், 'Ready' என்றவுடன் பிள்ளைகள் க. ப.-வைப் பார்க்கட்டும். அப்போது அட்டையை எடுத்துவிடுக. மறுபடியும் எழுத்துக்களை அட்டையால் மூடிவிட்டு, அவர்கள் பார்த்ததை சிலேட்டில் உடனே எழுதும்படி செய்க. முதலில் ஒரு சிலரே சரியாய் எழுதுவார்களாயினும் பலர் எழுதும்வரை இம்முறையைத் தொடர்ந்து செய்யவும். இதைப்போன்ற முறைகளாலும், வெட்டெழுத்துக்களைக் கோர்க்கச்செய்து புதுப்பதங்களை அமைப்பதாலும் விரைந்து படிக்கும், அப்பியாசம் உண்டாகும்.

II, III வகுப்புகளில் அச்சுப்பிரதி புத்தகத்தில், விஷயத்தைக் கண்டுபிடிக்கவும், எடுத்துக்கூறவும் திறமை உண்டாக்க வேண்டும். இதை நிறைவேற்ற ஏராளமான வாசிப்பு அப்பியாசம் தேவையாகும். மௌன வாசிப்பு ஒரு சிறந்த உபாயமாகின்றது.

(1) முதலில் வாக்கியங்களை அவற்றிலடங்கிய கருத்துக்கொத்தபடியாகப் பிரித்துக்கொடுத்து (Phrasing or grouping of words) உதவலாம். பிறகு பிள்ளைகளே அவ்வாறு வாக்கியங்களைப் பிரித்துக்கொள்ளும்படி சொல்லலாம்.

(2) இயற்கை வாசிப்புக்கு ஏற்றபடி குரலைமாற்றி சம்பாஷணையைப்போல் வாசிக்கும்படி பழக்குதல்வேண்டும். இராகத்தோடு படிக்கும் வழக்கம் துவக்கத்திலேயே நீங்கவேண்டும்.

(3) படித்த விஷயத்தை எடுத்துக்கூறும்படி தூண்டவேண்டும்.

(4) முதலில் சிறு சிறு பகுதிகளையும், பின்னர் முழுப் பகுதியையும் தொடர்ந்து கூறும்படி அப்பியாசம் கொடுத்துவரவேண்டும்.

(5) ஒருவன் படித்ததிலுள்ள குற்றங்குறைகளை மற்றவன் எடுத்துக்காட்டலாம். ஆனால் பிறகு ஒழுங்குசெய்து நன்ருய்ப் படிக்கவேண்டும்.

(6) படிப்பதில் வெறுப்பு தோன்ருவண்ணம் இடைக்கிடை எழுத்து வேலை கொடுப்பது அவசியமாகும்.

II நிலை (IV & V வகுப்புகள்) பாடப்புத்தகத்திலுள்ள பாடங்களை கீழ்வருமாறு ஒழுங்குசெய்து வைத்துக்கொள்ளவேண்டும் : —

(1) வாசிப்பு அப்பியாசத்திற்கான பாடங்கள். (2) இலக்கண சம்பந்தமான பாஷாபிவிருத்தி பாடங்கள். (3) வியாசங்களுக்கானவை. (4) சொல்ல எழுதுவதற்கானவை (Dictation.) (5) பொது அறிவு சம்பந்தமானவை முதலியன.

படித்த பாடத்தின் சுருக்கம் வரையவேண்டியது அவசியம். வாய்மொழி வியாசம் (Oral composition) எழுத்து வியாசம் இவற்றில் முதலில் கூறப்பட்டது ஒவ்வொரு நாளிலும், இரண்டாவது வாரத்தில் குறிக்கப்பட்ட நாட்களிலும் நடைபெறவேண்டும். எழுத்து வியாசங்களைத் திருத்திக்கொடுப்பதில்தான் காரியசித்தி அடங்கியிருக்கிறதென்பதை மறக்கவேண்டாம். முதலில் பாடச்சுருக்கமும், பின்னர் பொது விஷயமும் வியாச பாடத்தில் அனுசரிக்கவேண்டும்.

இந்த நிலையில் வாசிப்பு சிறந்து இருக்கவேண்டியதவசியமாகையால் பாடப்புத்தகங்களுடன் உபப்பாட வாசிப்புக்கு (Extra reading) அனுகூலங்கள் அமையவேண்டும்.

கையெழுத்துப் பிரதிகளை ஏராளமாய் வழங்கி அவற்றைப் படிக்க வசதியமைக்கவேண்டும்.

கடைசியாக சமாச்சாரப் பத்திரிகைகளைப் படிக்க ஏற்பாடு செய்து மாணவர்கள் பத்திரிகை படிப்பதிலும் அதிலுள்ள விஷயங்களையறிந்து ஆராய்வதிலும் ஆர்வம் படைத்தவர்களாக ஆக்குவது ஆசிரியரது கடமையாகும்.

பாடக் குறிப்பு

(T. S. G.)

பாடம்: உடற்கூறு. வகுப்பு: V. நேரம்: 45 நிமிஷம்.

நோக்கம்: "ஜீரண அங்கங்களும் அவற்றின் வேலைகளும்" என்பதைப்பற்றிப் போதித்தல்.

உபகரணம்: கூடுமானுல் முயல் அல்லது ஆட்டின் இரைப்பையும் குடலும் அல்லது ஜீரண அங்கங்களின் மாதிரி உருவங்கள், படங்கள், க. ப. விளக்கங்கள் முதலியன.

பீடிகை: நமது சரீரத்தின் வெளி–உள்–உறுப்புக்கள் சரியாய் வேலைசெய்வதற்கு ஆகாரம் அவசியம் என்பதை ப்ரஸ்தாபித்து, என்னென்னவிதமான உணவை உண்கிறோம் என்பதைக் கூறச்செய்து, அந்த உணவு அடையும் மாறுபாட்டைப் பற்றிப் பார்ப்போம் என நோக்கத்தைத் தெரிவிக்கவும்.

விஷயம்	முறை
ஜீரண அங்கங்கள்	
1. பற்கள்: கடினமான உணவை மென்று அரைக்க உதவுகின்றன.	முன்னம் பற்கள், கடைவாய்ப்பற்கள் இவற்றின் உபயோகத்தையும், கடின உணவு, அதன் தன்மையையும், கேள்விகள், உதாரணங்கள்மூலம் சம்பந்தப்படுத்திச் சொல்லச் செய்க.
2. உமிழ்நீர் கோளங்கள்: இவற்றினின்று உமிழ்நீர் சுரந்து கடின உணவை மிருதுவாக்குவதுடன் உணவிலடங்கிய மாவுப் பொருளிலுள்ள சர்க்கரையைப் பிரித்து இரத்தத்துடன் சேர்க்க உதவியாய் இருக்கின்றன.	உபகரணத்தைக்கொண்டு உமிழ்நீர் கோளங்கள் அமைந்துள்ள ஸ்தானங்களைக் காட்டவும். இனிய பண்டங்களைப் பார்த்தாலும், எண்ணினுலும்கூட உமிழ்நீர் சுரப்பதைப்பற்றிக் கூறச்செய்யவும்.

விஷயம்	முறை
3. அன்னக்குழாய்: நாம் மென்று தின்னும் உணவு இதன் வழியாகத்தான் படிப்படியாய் இரைப்பைக்குள் செல்லுகின்றது. நாம் பருகும் ஜலமும் இதன் வழியாகத்தான் போகிறது.	உணவை மென்று தின்னுவிடில் வயிற்றுவலி, அஜீர்ணம் முதலியவை உண்டாகும் என்பதை இங்கு எடுத்துக்கூறவும். உபகரணத்தைக் கொண்டு இதன் அமைப்பை விவரித்து விளக்கவும். அன்னக்குழாயின் உட்புறத்திலுள்ள வளையங்களையும் சதை மடிப்புகளையும் பார்க்கச்செய்க.
4. இரைப்பை: சுமார் ஒரு படி ஜலம் கொள்ளக்கூடிய ஒரு தசைநாராலான, கெட்டியான பை. உட்புறத்தில் சதை மடிப்புகளும், முட்களும் அமைந்திருக்கின்றன.	உபகரணத்தைக் காட்டி உள் அமைப்பை விவரிக்க. சதை மடிப்புகளுக்கிடையில் உணவு சென்று அங்கு நன்றாய் அது அரைக்கப்படுகிறதென்பதை விளக்கவும். (அம்மடிப்புகள் அடிக்கடி விரிந்து சுருங்கி உணவை அரைக்கும் என்பதைக் கூறி விளக்கவும்.)
5. தீபனநீர்: இது இரைப்பையினின்று உற்பத்தியாகும் ஒருவித காரமுள்ள திராவகம். இது உணவிலுள்ள மாவுப்பொருளையும், சத்துப்பொருளையும் கரைக்கவல்லது.	கடலை, மொச்சை, துவரை, உளுந்துபோன்றவையும் மாமிசம்போன்றவையும் சத்துப்பொருள் எனப்படும் என்பதைக்கூறி, தீபனநீர்—அல்லது 'ஜடாராக்னி' என்ற திராவகத்தின் வேலையை விளக்குக. இப்போது இரைப்பையில் உணவு பாகுபோன்ற தன்மையையடைந்திருக்கும் எனக் கூறுக.
6. சிறுகுடல்: இது ஒரு மிக நீண்ட குழல். இது சுருங்கி விரியும் தன்மையுடையது.	உபகரணங்களைக் கொண்டு விஷயத்தில் கூறப்பட்ட அங்கங்களைக்காட்டி விவரிக்க.

விஷயம்	முறை
இதன் முதற் பகுதிக்கு பிரத மாந்திரம் என்று பெயர். இதில்தான் ஜீரண வேலை முழுவதும் நடைபெறுகிறது. இதற்கு உதவியாக பித்தநீர் கல்லீரலிலிருந்தும், கணயநீர், கணயத்திலிருந்தும் உற்பத்தியாக ஓடிவந்து உணவிலுள்ள கொழுப்புப் பொருளைக் கரைக்கிறது.	இரைப்பையிலுள்ள அன்னப்பாகில் அடங்கிய கொழுப்புப்பொருள் எல்லாம் இங்கு கரைபடுகிறதெனக் கூறவும். அன்றியும், சிறுகுடலிலிருந்து சிறுகுடல்நீர் சுரந்து எஞ்சிய சத்து, மாவு, கொழுப்புப் பொருட்களையெல்லாம் நன்றாய்க் கரையும்படி செய்கிறதென்று சொல்லவும்.
7. பெருங்குடல் : இது சிறுகுடலின் தொடர்ச்சியே. உணவின் கழிவுப்பொருளை மிருதுவாக்கி வெளியேற்ற உதவியாய் இருக்கிறது. பெருங்குடலின் முடிவில் ஆசனம் அமைந்திருக்கிறது.	உபகரணங்களைக் கொண்டு விவரிக்கவும்.
நமது உணவிலடங்கிய சத்து, மாவு, கொழுப்புப் பொருள்கள் இரத்தத்துடன் கலக்கக்கூடிய நிலைமையை அடையச் செய்வதே ஜீரண அங்கங்களின் வேலையாகும்.	கடினமான பொருள்கள் அரைபட்டு, அல்லது கரைந்து திரவத்தன்மையடைவதே ஜீரணமாதல் என்பதைக் கேள்விகள் மூலம் வரவழைக்க.
உணவின் இந்த நிலைமையைத்தான் ஆகார சத்து என்போம். இதுதான் இரத்தமாக மாறுகிறது.	இதை விவரிக்க.

பரீட்சை

1. பற்களின் வேலை என்ன ?
2. உணவை ஏன் மென்று தின்னவேண்டும் ?
3. உமிழ்நீர் சுரப்பது ஏன் அவசியம் ?

4. மாவுப் பொருள், சத்துப்பொருள், கொழுப்புப் பொருள் இவை ஒவ்வொன்றுக்கும் 2 உதாரணங்கள் கூறுக.

5. தீபன நீரின் வேலை யாது?

6. உணவு எப்பிரதேசத்தில் முற்றிலும் ஜீரணமடைகிறது?

7. பித்தநீர், கணயநீர், இவற்றின் உபயோகத்தைக் கூறவும்.

8. வயிற்றுவலி ஏன் உண்டாகிறது?

9. ‘ஜீரணம்’ என்றால் என்ன?

10. ‘இரத்தம்’ என்றால் என்ன?

JL
ஜூ/ 14/1PP
M40/30/12

க. ப. சு. ஜீரண அங்கங்களும் அவற்றின் வேலைகளும்

1. **பற்கள்:** உணவின் கடினமான பாகத்தை அரைத்து, மெல்ல உதவுகின்றன.

2. **உமிழ்நீர்:** உணவைக் கரைக்கவும், மாவுப்பொருளிலுள்ள சர்க்கரையைப் பிரிக்கவும் உதவி.

3. **இரைப்பை:** தீபனநீரின் உதவியால் உணவின் சத்துப்பொருள் அரைபட உதவியாய் இருக்கிறது.

4. **சிறுகுடல்:** பிரதமாந்திரத்தில், பித்தநீர், கணயநீர், சிறுகுடல்நீர் இவற்றின் உதவியால், கொழுப்புப்பொருளும், எஞ்சிய சத்துமாவுப் பொருளும் கரைந்து ஜீரண வேலை முடிவடைகிறது.

5. பெருங்குடல் உணவின் கழிவுப்பொருளை வெளியேற்ற உதவுகிறது. நாம் உண்ணும் உணவுப்பொருள்கள் ஜீரண அங்கங்களின் உதவியால் இரத்தத்துடன் கலக்கவல்லதான நிலையை அடையும் வேலைக்குத்தான் **ஜீரணம்** என்று பெயர்.

அந்த நிலையில் அது ஆகார சத்தாகும். ஆகார சத்து இரத்தமாக மாறும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182293
சென்னை-600 008

மிஸ்டர் கருடன் செய்த கபடச்செயல்

[சிறுவர்களுக்கான சிறு கதை]

A. Nargunam

"ஊகும்; ஊம், உம், உம், நானுந்தான் வருவேன்," என்று ஒரே பிடிவாதமாய் அழ ஆரம்பித்தான் பையன் கோழிக்குஞ்சு.

"சனியன் மாதிரி எடுத்ததுக்கெல்லாம் நீ என்னத்துக்கு வர?" என்று அதனுடைய தந்தையாகிய மிஸ்டர் சேவல் சீறி விழுந்தது.

"ஏன்? பையன் வந்தாப்போகிறுனே? நம் பையன் நம் மோடு வராம பின்ன யாரோடு வரப்போறுன்? பையன் எவ் வளவு அழகாய் இருக்கான் பாருங்கள்! அவன் அழகை பிறத் தியார் கண்டு மகிழ்ந்தா, அது நமக்குத்தானே பெருமை? பையன் வரட்டுமே!" என்று சலுகைச் சொல்லிக்கொண்டே மிஸஸ் பேட்டைக்கோழி பையனுக்கு தலையை சீவி அழகு படுத்தியது.

பம்! பம்! என்ற சப்தம்! ஒரு கார் அவர்கள் வீட்டு எதிரில் வந்து நிற்கிறது. மிஸ்டர் புறுதான் கார் டிரைவர். எல்லோருமாக காரில் ஏறிக்கொள்ளுகிறுர்கள். கார், "புர், புர், புர்" என்று செல்லுகிறது. கடைசியாக ஓர் ஆற்றங்கரையில் போய் நிற்கிறது. மிஸ்டர் சேவல், மிஸஸ் பெட்டைக்கோழி, பையன் கோழிக்குஞ்சு மூவருமாக ஒருவர் ஒருவரோடு கை கோர்த்துக்கொண்டு ஆற்றங்கரையில் காற்று வாங்குகிறுர்கள். மிஸ்டர் புறு காரிலேயே படுத்து நன்றுய் தூங்கிவிட்டது.

ஒரு கருடன் மிக வருத்தத்துடன் ஒரு மரத்தில் உட் கார்ந்திருப்பதை மூவரும் காண்கிறுர்கள். பையன் கோழிக் குஞ்சு உடனே தன் தகப்பன் சட்டைப்பைக்குள் புகுந்து மறைந்துகொள்கிறுன், பயமிகுதியால்.

"ஏன் தம்பி இண்ணைக்கு இவ்வளவு வருத்தம்?" என்று மிஸ்டர் சேவல் கருடனைக்கிண்டிற்று.

"இல்லையண்ணு கொஞ்ச நாளைக்குமுன்னே, என் பையனை யாரோ சுட்டு கொண்ணுட்டாங்கள். பையன் ரொம்ப அழகு. உங்கப் பையனைக் கண்டதும் அவன் ஞாபகம் வந்துவிட்டது.

உங்கப் பையனோடு கொஞ்சநேரம் கொஞ்சி விளையாடினாதான் என் வருத்தம் தீரும்போலிருக்கு! உங்கப் பையன் மாதிரியே என் பையனும் கண்ணால் பார்க்க முடியாதவ்வளவு அழகு! அவனும் மண்ணாபோய்ட்டான்!'' என்று சொல்லிக்கொண்டே மளமளவென்று கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்தது.

உடனே மிஸ்டர் சேவலுக்கும் மிஸஸ் பெட்டைக்கோழிக்கும் சொல்ல முடியாத பரிதாபமும் இரக்கமும் வந்துவிட்டது.

"அழாதப்பா! அழாதே! உலகத்தில் யார்தான் சாவாதிருக்கப்போரா? எல்லாம் ஒரு சமயத்திலே செத்துதானே ஆகணும்?" என்று கருடனுக்கு ஆறுதல் கூறிற்று மிஸ்டர் சேவல்.

"ஏன் அண்ணி! நீதான் கொஞ்சம் உங்க பையனை என்னிடம் அனுப்பேன்! கொஞ்சநேரமாகிலும் அவனோடே விளையாடி, நான் என் துக்கத்தை சமாளிக்கிறேன்!'' என்று கருடன் மிஸஸ் பெட்டைக்கோழியிடம் மிக வினயமாய் கெஞ்சிற்று.

"சரி; நீ எவ்வளவாகிலும் பையனோடு விளையாடிக்கோ! பையன் கிட்டமட்டும் வரப்படாது. கொஞ்ச தூரத்திலிருந்தே விளையாடிக்கிறியா?'' என்று சொல்லிக்கொண்டே "வாடா கண்ணு," என்று தன் பையனைத் தூக்கி தரையில்விட்டது.

கருடனுக்கு அளவில்லா சந்தோஷம்! உடனே கைகொட்டிக்கொண்டு ஆனந்த மிகுதியால் பையனைச் சுற்றி சுற்றி பறக்க ஆரம்பித்தது. சற்று நேரம் பொறுத்து,

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுதென் காதினிலே"... ...

என்ற பாரதி பாட்டை பாடிக்கொண்டே, கோழிக்குஞ்சை சுற்றி சுற்றி வந்து கும்மியடித்தது.

தங்கள் பையனுக்கு கொடுக்கப்படும் மதிப்பைப்பற்றி தாய் தந்தையர் இருவருக்கும் பேரானந்தம். கருடன்மேல் ரொம்பவும் பிரியம் ஏற்பட்டுவிட்டது. குழந்தையை மிஸ்டர் கருடனிடமே விட்டுவிட்டு இருவரும் ஆற்றங்கரையோரமாய் உலாத்திக்கொண்டே சென்றார்கள். வெகு தூரம் சென்றபின் "கியான், கியான்'' என்று தம் பையன் கதறும் சப்தம் கேட்டது. திகிலுடன் திரும்பிப் பார்த்தார்கள்.

போக்கிரி மிஸ்டர் கருடன் தனது கூறிய நகங்களால் கோழிக்குஞ்சை கௌவிப்பிடித்துக்கொண்டு ஆகாயத்தைக் கிழித்து வெகு வேகமாய்ப் பறந்துகொண்டிருந்தது!!

உடனே அவசரம் அவசரமாக இருவரும் காருக்குப்பறந்து சென்று தூங்கிவிழுந்துகொண்டிருந்த மிஸ்டர் புரு டிரைவரை எழுப்பி, காரை நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குவிடச் சொன்னார்கள். சங்கதியை அறிந்துகொண்ட மிஸ்டர் புரு, "போங்க, சார், நீங்க ஏன் அனுவசியமாய் அவனிடம் வைத்துக்கிட்டிங்க" "வஞ்சகம் செய்வாரோடு இணங்கவேண்டாம்," என்று நீங்க சின்ன வயசில படிக்கலையோ? ஊகும். நான்மாட்டேன். வீட்டுக்குபோவதென்னுமட்டும் ஓட்டுவேன்!" என்று சொல்லி விட்டது.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறதிலேயும் ஒன்றும் பிரயோஜனமில்லையென்று கண்டுகொண்டு, தங்கள் மூடத் தனத்தை உணர்ந்து கஸ்திப்பட்டுக்கொண்டே மிஸ்டர் சேவலும், மிஸஸ் பெட்டைக்கோழியும் காரில் ஏறி வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

யானையைப்பற்றிய பழமொழிகள்

(I. Dhanaraj, *Sec. Grade*.)

1. யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்.
2. யானை, தன் தலையில், தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல.
3. யானை அறிந்திருந்தும் பாகனையே கொல்லும்.
4. யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே.
5. யானை படுத்தால் குதிரைக்கு மோசமா?
6. யானைக்கொரு காலம், பூனைக்கு ஒரு காலம்.
7. யானைப் பசிக்குச் சோளப்பொரி எம்மாத்திரம்.
8. வெண்கலக் கடையில் யானை புகுந்தாற் போல்.
9. யானை அசைந்து அசைந்து தின்னும்; வீடு அசையாமல் தின்னும்.
10. யானைமேல் இருப்பானைச் சுண்ணம்பு கேட்பதுபோல்.
11. யானைக்கும் அடி சறுக்கும்.
12. யானையைக் கட்டித் தீனி போட்டாற் போல்.
13. தன்னூர் யானை அயலூர்ப் பூனை.
14. குருடர் யானை பார்த்த கதைபோல்.

கல்வித்துறையில் கற்கும் கைவேலைகள்

(Educational Hand Work)

S. Govindarajalu Naidu, *Manual Training Instructor*

பாடசாலைகளிலே படிக்கும் ஒவ்வொரு சிறுவனும் ஏதாவதொரு கைவேலையைக் கட்டாயமாய்ப் பழகிக்கொள்ளவேண்டும். அக்கைவேலைகளைச் சரியாய்க் கற்றுக்கொடுப்பது அவ்வவ் வகுப்புகளைக் கவனித்துவரும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். ஒரு சிறுவனை எடுத்துக்கொண்டோமானால் அவனுக்கு அவனது நான்காவது வயது முதல் பதினான்காவது வயதுவரையில்தான் அவனுக்கு கைவேலைகள் சரியாய் வரும் என்று சில மேல்நாட்டு கைவேலை நிபுணர்கள் பரீக்ஷைசெய்திருக்கின்றனர். ஆகவே நமது பாடசாலைகளிலே முதல் வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரையில் ஆரம்பக் கைவேலைகளையும், ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளில் மத்தியம கைவேலைகளையும், ஒன்பது பத்து வகுப்புகளுக்கும், வாலிபர்களுக்கும் இன்னும் சற்று கடினமான கைவேலைகளையும் கற்றுக்கொடுப்பது உசிதம்.

கைவேலையை எச்சிறுவன் கவனத்தோடும், ஊக்கத்தோடும், பொறுமையோடும் கற்கிறானோ அச்சிறுவனுக்கு மற்றப் பாடங்களிலே அவனுடைய மூளை சரியாய் வேலைசெய்து அவன், தான் படிக்கும் வகுப்பிலே எல்லாப் பாடங்களிலும் முதன்மையாக விளங்குவான் என்பது திண்ணம். தவிர, ஒரு சிறுவனுக்குச் சுத்தமாய் இருத்தல் என்னும் நற்குணத்தைப் போதிப்பது கைவேலையேயாகும். நாம் வாசிக்கும் சமய நூல்களிலேயும் சரித்திரங்களிலேயும் பார்த்தால் அர்ச். சூசையப்பர், திருவள்ளுவர், திருநீலகண்டர் முதலியவர்கள் முறையே தச்சுவேலை, நெசவு வேலை, களிமண் வேலைகளைக் கையாண்டுவந்தார்களென்று தெரிகிறது. இன்னும் சரித்திரம், சாஸ்திரம் (Science) சம்பந்தமாகக் கவனித்தால் கைவேலைகளிலே முன்னுக்கு வந்த பல மேல்நாட்டார்களைப்பற்றி அறிந்துகொள்ளலாம்.

இனியாகிலும் இந்தியக் கைவேலைகளை அபிவிருத்திசெய்து பாடசாலைகளிலே சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அதைக்கொண்டு அச்சிறுவர்கள் தங்களுடைய பிற்காலத்தில் சிறிது பயனாவது அடையும்படி செய்வது ஆசிரியர்களுடையவும் பெற்

ரோருடையவும் கடமைகளாகும். சில பெற்றோர்கள் கைவேலைகளைக் கேவலமான தொழில் என்று எண்ணுகிறார்கள். சில ஆசிரியர்கள் கைவேலைகளை நன்றாய்ப் பழகியிருந்தும் அதைத் தங்களுடைய மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கத் திறமையற்றவர்களாயும் இருக்கிறார்கள். இப்படி ஒரு சிறுவனுக்கு இருவித இடையூறுகளிருப்பின் அவன் கைவேலை பழகுவது கடினமாகுமல்லவா?

கைவேலை என்னும் பாடம் ஒரு பெட்டிக்கு உவமை என்று வைத்துக்கொண்டால், அக் கைவேலைப் பெட்டியிலே கணிதம், சித்திரம், சைன்ஸ், சரித்திரம், பூகோளம், இயற்கைநூல் என்னும் பல நாணயங்கள் உள. அதாவது கைவேலை என்பதில் எல்லாப் பாடங்களும் சம்மந்தப்பட்டிருக்கிறது என்பதாகும். சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும் ஒரு சிறுவனுக்கு உண்டாக்குவதும் கைவேலையே. எந்தச் சிறுவனுக்கு சித்திரம் வரைவதில் ஆசையும் விருப்பமும் ஊக்கமும் இருக்கிறதோ அவனுக்குக் கைவேலை தானாகவே வரும் என்பது திண்ணம்.

கண்பார்த்து கை செய்தலாகிய (Hand and Eye Training) இவ்வேலையை எவரும் கற்பது கடினம் என்று சொல்லமாட்டார்கள். ஒரு பாடசாலையில் வாசிக்கும் ஆண்பிள்ளைகளைக் காட்டிலும் பெண்பிள்ளைகளுக்கே கைவேலைகள் சீக்கிரத்தில் வரும். இதற்குக் காரணம் பொறுமையேயாகும். உபாத்தியாயரே களிமண்ணைத் தொடுவதற்கும் கத்தரிக்கோலைப்பிடித்தோ அல்லது கத்தியைப்பிடித்தோ ஒரு காகிதத்தை வெட்டுவதற்கும் வெட்கப்பட்டால் பிள்ளைகள் என்ன செய்வார்களென்று யூகித்துக்கொள்ளுங்கள்.

நான்கு அங்குல சதுரமுள்ள ஒரு காகிதத்தை ஒரு அங்குல சதுரமாக ஓரங்கள் ஒன்றாய்ப் பொருந்தும்படி மடிப்பதே "காகிதமடித்தல்" என்னும் வேலைக்குப் பீடிகையாகும். அதைத்தவிர்த்து நான்கு அங்குல சதுரமுள்ள ஒரு காகிதத்தை அரைகுறையாக மடித்து ஓரங்கள் ஒன்றோடொன்று சேராமல் மடிப்பது கைவேலைக்கழகல்ல என பிரேளன் என்னும் ஆங்கிலேய நிபுணர் ஒருவர் சொல்லுகிறார்.

காகிதத்தினாலும் களிமண்ணினாலும் பிள்ளைகளுக்குப் பல விதமாகப் பல உருவங்களை விளக்கிக் காட்டலாம். ஆகையால் முதல் வகுப்பிற்கு களிமண் வேலை துவக்கும்பொழுது அச்சிறுவர்களை முதல் முதலில் பெரிய பெரிய உருண்டை வடிவங்களாக களிமண்ணை உருட்டிப்போடச் சொல்வது உத்தமம். பிறகு,

கோலிகளைப்போல உருட்டச்சொல்லி சரியாய் உருட்டுகிறுனு அல்லது தட்டை வடிவமாகிறதா என பார்க்கவேண்டும். அதன் பின்னர் சுண்டைக்காயளவு சுமார் 10 உருண்டைகள் உருட்டச் சொல்லி அவைகளை வெய்யிலில் காயவைக்காமல் நிழலிலேயே காயவைத்து மறுநாள் பிள்ளைகளுக்கு அவனவன் செய்தது எப்படி இருக்கிறது என்று காண்பிக்கவேண்டும். மண்ணினுடைய களிப்பிற்குத் தகுந்தாப்போல் மணல் கொஞ்சம் சேர்த்துக்கொண்டால் பிள்ளைகள் செய்யும் உருவம் வெடிக்காமல் இருக்கும்.

களிமண்ணைத் தொட்டதும் சில சிறுவர்களுக்கு ஜல தோஷம் முதலியவை ஏற்படுமாகையால் களிமண் வேலை போதிக்க கோடைகாலமே ஏற்றதாகும்.

இனி ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்குரிய ஆரம்ப கைவேலைகள் எவை என்று சற்று ஆராய்வோம்.

1. களிமண் வேலை (Clay Modelling).
2. காகிதம் மடித்தல் (Paper Folding).
3. காகிதக் கத்தரிப்பு (Paper Cutting).
4. காகித நெசவு (Paper Weaving).
5. பைண்டிங் (Paper Binding).

பிள்ளைகளின் கண்களைக் கவரச்செய்வது வர்ணத்தாள்களேயாகையால் ஷெ வர்ணக் காகிதங்களைக்கொண்டு மேலே குறித்திருக்கும் வேலைகளைச் செய்யச்சொல்வது உசிதமாகும்.

பொதுவாக நாம் காகிதக் கத்தரிப்பு என்னும் வேலையை எடுத்துக்கொண்டால் மூன்ருவது வகுப்பிற்குமேலிட்டு ஒரு பையனுக்குத் தன் வகுப்பில் என்ன கதை நடக்கிறதோ அதை உடனே வர்ணக் காகிதத்தினுல் அக்கதையில் வரும் உருவப் படங்களை வெட்டி ஒரு அட்டையில் ஒட்டிக்கொண்டு வரச்சொல்வது உத்தமம். அம்மாதிரி நன்ருய்ச் செய்யக்கூடிய பல பிள்ளைகளைக் கொண்டுவரும்படி செய்து, செய்தவர்களின் பெயர் வகுப்பு முதலியவைகளை எழுதச்சொல்லி அப்பாடசாலையிலேயே சேகரித்து (Collection of Handwork) ஒரு சிறு காட்சிசாலை (Museum) ஏற்படுத்திக்கொண்டால் அவைகள் உபகரணங்களாகவும் இருக்கும். அலங்கார சாதனமாகவும் (Decoration of the Class) இருக்கும். பாடசாலைகளில் வெறுஞ்

சுவர்களை வைத்திருப்பதைவிட கைவேலைப்பொருள்கள், சித்திரப்படங்கள் முதலியவைகளைச் சிறுவர்களையே செய்யச்சொல்லி அவைகளைச் சுவர்களில் தொங்கவிட்டிருந்தால் பிள்ளைகள் அவைகளைப்பார்த்தே எல்லாம் படித்துகொள்வார்கள்; பிறகு புத்தகத்தைப் பார்த்து நாம் கற்றுக்கொடுக்கலாம்.

பேப்பர் பைண்டிங் (Paper binding) வேலையிலே பிள்ளைகளைக் காகிதங்கள் வாங்கிவரச்சொல்லி அவர்களையே ஊசி நூல்களைக் கொண்டு தைக்கச் சொல்லவேண்டும். பிறகு ஓரங்கள் நீட்டிக்கொண்டு (Projections) இருந்தால் அவைகளை ஒழுங்காக வெட்டச்சொல்லவேண்டும். அவர்கள் தைத்த நோட்டுகளை அவர்களே உபயோகிக்கச்சொல்லவேண்டும். இது சுயவேலை (Self Stiching and binding) என்று சொல்வதாகும். அம்மாதிரியே ஒரு சிறுவனுடைய புத்தகம் கிழிந்திருப்பின் அதைப் பசையினால் அச்சிறுவனையே ஒட்டச்செய்து, மூலைகளை (Projection) வெட்டியானதும், அதைப் படியவைப்பதற்காக ஒரு பாரத்தைத் தூக்கிவைக்கவேண்டும்.

இனி எவ்வெவ்வகை வேலைகள் எவ்வெவ் வயதுகளில், எவ்வெவ் வகுப்புகளில் எப்படி ஆரம்பிக்கலாம் என்பதை ஆராய்வோம்.

கைவேலைகள்

வயது	சித்திரம்	காகிதம் மடித்தல்	களிமண் வேலை	அட்டை வேலை	நெசவு வேலை	தச்சு வேலை
5	×	×	×			
9	×	×	×			
10	×		×	×		
11	×		×	×		
12	×			×		
17	×			×	×	×

கைவேலைகள்

Stand. & Forms	சித்திரம்	காகிதம் மடித்தல்	களிமண் வேலை	அட்டை வேலை	நெசவு வேலை	தச்சு வேலை
1st Std.	×	×	×			
2nd ,,	×	×	×			
3rd ,,	×	×	×			
4th ,,	×	×	×			
5th ,,	×	×	×			
6th ,,	×		×	×		
7th ,,	×		×	×		
8th ,,	×		×	×	×	×
III&IV F.	×			×	×	×
V&VI F.				×	×	×

I. காகிதம் மடித்தல் (Paper Folding) :—

To fold a square 2″ side into 4 squares 1″ side.



Exercise 1. 2″ சதுரமுள்ள ஒரு காகிதத்தை 4 ஒரு அங்குல சதுரங்களாகும்படி மடித்தல்.

புள்ளி கோடுகள் (dotted lines) மடித்திருக்கும் பாகத்தைக் காட்டுகின்றன.

Exercise 2. சாதாரணக் கப்பல் :

I Stage :



II Stage :



III Stage :



Practical Work :—இரண்டு அங்குல சதுரமுள்ள ஒரு காகிதத்தை 4 ஒரு அங்குல சதுரங்களாகும் Exercise 1-ல் காட்டியதைப்போல் மடித்து ஒரு சிறிய 1 அங்குல சதுரம் செய்யவேண்டும். இப்பொழுது Stage II உருவத்தை அடைகிறது. அதில் தலைப்பு பக்கம் நோக்கி நிற்கும் மூலையில் 4 இதழ்கள் இருக்கின்றன. அவைகளில் மத்திய இரண்டு இதழ்களையும் விட்டுவிட்டு பக்கங்களில் இருக்கும் இரண்டு இதழ்களையும் Stage II-ல் காட்டியபடி A என்னும் முக்கோண வடிவத்தை B என்பதின்மேல் பொருந்தும்படி மடிக்கவேண்டும். பிறகு மத்திய இரண்டு இதழ்களையும் ஏதாவதொருபக்கமாய் மடித்து மத்தியில் பிளவுள்ள பாகத்தை A B-யில் மடிப்பு விழும் படி மடிக்கவேண்டும். பிறகு அதன் கீழ்ப்பாகத்தைப் பிய்த்து விட்டால் அது ஒரு சாதாரணக் கப்பலின் உருவத்தை அடைகிறது.

[மற்றவை அடுத்த மலரில் தொடரும்.]

இயற்கைப் பாடம்: ரப்பர்

(கொத்து 30. மலர் 8. பக்கம். 190-ன் தொடர்ச்சி)

U. A. Dass.

VI. ரப்பர் பால் எடுக்கும் விதம்

கன்று வைத்த 5-ம் ஆண்டு பால் எடுக்கலாம். அப்பொழுது எடுக்கும் பாலைவிட சில வருடங்கட்குப் பிறகு எடுக்கும் பாலே மிகச் சிறந்தது.

முன் கூறியபடி பட்டைகளின் உட்புறத்தில்தான் ரப்பர் பால் குழாய்கள் இருக்கின்றன. எனவே பால் எடுக்க இப்பட்டைகளைச் செதுக்கவேண்டும். பட்டைகளை வெகு கவனத்துடன் நீக்குகின்றார்கள். ஏனெனில் பட்டைகளை அதிக ஆழமாகச் செதுக்கிவிட்டால் மரத்திற்குச் சேதம் ஏற்படும். ஆழம் போதுமான அளவு இல்லாவிடினும் பால் தாராளமாய் வடியாது. பட்டை எடுத்தல் ஒரு மாதத்தில் $\frac{1}{2}$ அல்லது 1 அங்குலம் வரையில்தான் இருக்கலாம். மேலும் பால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் வடியும். ஆதலால் மாதத்தில் 15 முறைதான் பால் எடுக்கக்கூடும். அப்பதினைந்து நாட்களிலும் பட்டை எடுத்தல் ஒரு அங்குலத்திற்கும் குறைவதால் ஒருமுறை எவ்வளவு பட்டைதான் எடுக்கலாம் என்று வாசகர்களே யூகித்துக்கொள்வது சுலபம்.

பால் எடுப்பதில் இரண்டு முறைகளை அநுசரிக்கின்றார்கள். சிலர் சாய்வாக பட்டையை நீக்கிப் பால் எடுப்பார்கள். மற்றும் சிலர் இரு சாய்வு கோடுகள் சந்திக்கும்படி V வடிவத்தில் பட்டை எடுக்கின்றனர். எம்முறையால் பால் எடுப்பினும் வெட்டின் அடிபாகத்தினின்று கீழே சிறிதுதூரம் ஓர் நேர் வெட்டு வெட்டுகிறார்கள். இதன் வழியாகப் பால் வடிந்து அடியில் வைக்கப்பட்டுள்ள கிண்ணத்தில் சேர்கின்றது. வெட்டினவுடன் விநாடிக்கு இரு சொட்டுகள் வீதம் பால் வடியும். ஒரு மணிக்குப் பிறகு நிமிடத்திற்கு ஒரே சொட்டுதான் விழும். எவ்விடத்திலும் காலையிலேயே பால் எடுக்கிறார்கள். அப்பொழுதுதான் பால் ஏராளமாயும் தாராளமாயும் வடியும்.

பின்பு பால் எல்லாம் சேகரிக்கப்பட்டு ஒரு பெரிய வாளியில் தொழிற்சாலைக்கு வெகு சீக்கிரம் கொண்டுபோகப்படுகின்றது. தாமதமானால் பால் உறைந்துவிடும். பால் உறையாமல் இருக்கும்படி சோடியம் சல்பைட்டைச் சேர்க்கிறார்கள்.

சாதாரணமாய் ஓர் மரத்தில் முதல்தடவை பால் எடுக்கத் துவக்கும்பொழுது பூமியினின்று 2 அல்லது 4 அடி உயரத்தில் வெட்ட ஆரம்பித்து கீழ்நோக்கியே வெட்டிக்கொண்டுவருகிறார்கள். சிற்சில இடங்களில் மரத்தின் சுற்றளவில் கால்பாகத்தை மட்டும் வெட்டி பால் எடுப்பார்கள். வேறு சில இடங்களில் பாதியளவு வெட்டி பால் சேகரிப்பார்கள். இலங்கைத் தீவில் 6 மாதம் அல்லது 1 ஆண்டு சென்றபிறகு வெட்டும் முறையை மாற்றி பால் எடுக்கப்படாத மறு பாதியில் பால் வடிக்கின்றார்கள். மற்ற தேசங்களில் தரைமட்டும் பால் எடுத்தபிறகே மறு பக்கத்தில் பால் வடிக்க ஆரம்பிக்கின்றார்கள். பால் வடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்தில் பாலானது ஆடையைப்போல் படியும். இதை எடுத்து சுத்தம் செய்து மரத்தில் சுரண்டிய ரப்பர் (Tree scrap) என்று விற்கிறார்கள். இது வெகு மட்டமான ரப்பர்.

பட்டைகள் எடுக்கப்பட்ட இடத்தில் காலக்கிரமத்தில் புது பட்டைகள் தோன்றுகின்றன. ஆதலால் சில ஆண்டுகட்குப் பிறகு முன் பால் எடுத்த இடத்திலேயே மறுபடியும் பால் வடிக்கலாம். ஆயினும் ஒவ்வொருதடவையும் புதுப்பட்டைகள் தோன்ற காலதாமதம் ஏற்படுகின்றது. பாலும் ஒவ்வொருதடவையும் குறைந்துகொண்டே வருகின்றது. பல ஆண்டுகட்குப் பிறகு பாலே அவ்விடத்தில் வடியாமலும் நின்றுவிடுகின்றது.

VII. பலன்

ரப்பர் மரங்களில் அநேக வகைகள் உண்டு. ஓர்வகை வருடத்திற்கு 4 அல்லது 5 பவுண்டு ரப்பர் கொடுக்கின்றன. மற்றோர் வகை இரண்டு பவுண்டுமட்டுமே தருகின்றன. ஆனால் இவற்றுள் சிறந்தவகை மரங்கள் 30 பவுண்டு வரையிலும்கூட கொடுக்கின்றன.

இப்பல்வகைப்பட்ட மரங்கள் எல்லாம் ஒரே தோட்டத்தில் இருக்கக்கூடும். அதிக பலனைத்தரும் மரங்களின் கன்றுகள் சில சமயங்களில் குறைந்த பலனைக் கொடுக்கின்றன. இதற்குக் காரணம் மகரந்த ஸ்பரிசம் குறைந்த பலன் கொடுக்கும் மரங்களினின்று ஏற்படுவதுதான். ஆதலால் தோட்டக்காரர்கள் செழித்து வளரும் கன்றுகளில் மிகப் பலன்தரும் மரங்களின் பூமொட்டுகளைத் தரித்து ஒட்டவைக்கின்றனர்.

(தொடரும்)

பள்ளி பால ஸங்கீதம்
(4-ம் 5-ம் வகுப்பிற்கு)

A. Gnanadickam, *Music Teacher*.
St. Joseph's Higher Elementary School, Ootacamund.

கடவுள் வணக்கம்

சங்கராபரணம் | ரூபகம்

1. சர்வலோகக் காரண
   ஸ்வாமி சரணம் தமியர்கார்
   சர்வமதுர மானபுனித
   ஸ்வாமி சரணம் தமியர்கார்

2. காரும் சகல லோகங்கள்
   ககன்செல்வழிஉ ராய்ந்திடா
   சீராய் இரவும் பகலும் வரவும்
   செய்தீர்மஹா விந்தையே

3. விந்தைபச்சைப் புற்களும்
   விளங்குந்தாவ ரவர்க்கம்
   சிந்தைகுளிர மலரும் பூவில்
   சேரமணம்நற் கனியிந்தீர்

4. ஈயும்ஞானம் பள்ளியில்
   எம்குருநல் லார்மொழி
   தூயமனதில் பாயஅறிவுந்
   துலங்கச்செய்இக் காலமே

5. காலதாம தம்செய்யாக்
   காத்தருள்வீர் கடமைதாம்
   ஞாலக் கதி நீ! பாலர் மடமை
   நாளும்களைவீர் அடிமையாம்.

1. ஸா ; | ஸா—ரீ ரீ நீ || ஸாஸா | ரீ—கா ; ; ||
   சர் ; வ—லோ. க கா. ர ண ; ;
   கா ; | கா — காமாகா || ரீஸா | ரீ — ஸா ; ; ||
   ஸ்வா ; | மி — சரணம் || தமி | யர்—கார் ; ;

2. பா ; | பா – பாமாகா || மா ; | மா – மாகாரீ ||
சர் ; | வ – மதுர || மா | ன – புனித ||
கா ; | கா – காமாகா || ரீஸா | ரீ – ரீ ; ; ||
ஸ்வா ; | மி – சரணம் || தமி | யர் – கார் ; ; ||

3. பா ; | பா – பாதாபா || மா ; | மா – மாபாமா ||
சர் ; | வ – மதுர || மா ; | ன – புனித ||
கா ; | கா – காமாகா || ரீஸா | ரீ – ஸா ; ;
ஸ்வா ; | மி – சரணம் || தமி | யர் – கார் ; ;

இவ்விதமே மற்ற எல்லா அடிகளையும் பாடி முடிக்கவும்:
; = இரண்டு அக்ஷரகாலம். , = ஓர் அக்ஷரம்.

கற்பிக்கும் முறை

ஸங்கீத ஆசிரியர் ஷை பாடலை, கொடுத்திருக்கும் ஸ்வர ராக தாளப்படி பாடியும், வாத்தியக் கருவிகளைக்கொண்டு வாசித்துப் பழகியபின் பிள்ளைகளுக்குக் கற்பிக்க சுலபமாகும். அவ்விதம் படிப்பிக்குமுன், கடவுளைப்பற்றிப் பொதுஅறிவுப் பாடம் போதித்து, இப்பாடலில் வரும் விஷயங்களையும் தாம் போதிக்கும் முறையுடன் கையாடவும் பாடலிலுள்ள கடின பதங்களை க-ப-வில் எழுதி உரையுடன் விளக்கவேண்டும். கூடினவரையில் ஸங்கீதம் கற்பிக்கத் தனி அறையாகத் தெரிந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் பாடக்கூடிய குரலில் (தொனியில்) ஸ்வரங்கள் (ச்ருதி) அமைத்துக்கொள்ளவேண்டும். வாத்தியக் கருவிகளை உபயோகிக்கும்பொழுது, அறையின் விஸ்தீரணத்திற்கும் பிள்ளைகளின் கூட்டத்திற்கும் தகுந்தவண்ணம் வாசிக்க, சிறுவர்கள் தங்கள் தொனியும், உபயோகிக்கும் பதங்களும் இராக தாளத்திற்குச் சரிவர பாடுகிறார்களா என்று கவனித்துத் திருத்தவேண்டும்.

பெரும்பாலும் எல்லாப் பிள்ளைகளும் எல்லா அடிகளையும் நன்கு மனதில் பதிந்து சுத்தமாய்ப் பாடத் தெரிந்தபின், வகுப்பில் தினந்தோறும் பாடவைக்கலாம். ஆசிரியரின் வலது இடது புறமாக நிற்கும் பாலர்களை இரு கட்சியாகப்பாவித்து ஒரு கட்சியார், பாடல் முதல் அடியில் உள்ள இரண்டு வரிகளை இருதரம் பாட, மற்றோர் கட்சியினர் மறு இரண்டடியை ஓர்தரம் பாடுவர். பின்பு இருகட்சியும் சேர்ந்து ஸ்வரத்தில் 3-வது சங்கதிபோல்

பாடி நிறுத்தவேண்டும். இங்ஙனமே ஒவ்வொரு அடியையும் இருகட்சிகள் மாறி மாறி எடுத்துப் பாடி முன் சொன்னது போல் யாவரும் சேர்ந்து பாடி முடிக்கவேண்டும்.

இவ்விதம் பாடும்பொழுது எல்லாப் பாலர்களும் கரங்களைக் குவித்து மார்பிற்குநேர்வைத்து பராக்கின்றி இருநயனங்களையும் மூடிக்கொள்ளவும் செய்யலாம். ஆடி அசையாமல் ஒழுங்காய் நிற்கக் கற்பிக்கவேண்டும். எல்லாப் பிள்ளைகளுக்கும் கடவுள் பக்தியை ஊட்டவேண்டும். (தொடரும்)

நமது போதனு விஷயப் பூங்கோத்து தனிப்பிரதி வேண்டியவர்கள், தபால் மூலமாக நமக்கு $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்புடன் மனு செய்துகோண்டோ, அல்லது கீழ்க்கண்ட இடங்களிலிருக்கும் எமது ஏஜெண்டுகளிடம் $1\frac{1}{2}$ அணு செலுத்தியோ பெற்றுக்கோள்ளலாம் :

1. *மானேஜர், ஸ்ரீ கிருஷ்ண விலாஸ்,*
   ஹையர் எலிமெண்டரி பாடசாலை,
   கலங்கானி, நாமக்கல் தாலூகா.
2. ஸ்ரீ M. *மரியண்ணன்,* R. C. *கியூஸ் ஏஜெண்ட்,*
   சுவாமியார் புதுத்தெரு, கோயமுத்தூர்.
3. ஸ்ரீ S. *யேசுவடியான், கியூஸ் ஏஜெண்ட்,*
   தலவாக்கல், சிலோன்.
4. ஸ்ரீ K. K. *ஞானப்பிரகாசம்,*
   பிராங்க்லண் ஹோட்டல்,
   ஹட்டன், சிலோன்.
5. ஸ்ரீ S. S. *அந்தோனி குருஸ்,*
   17, பழைய பஞ்சாப் தெரு,
   சேம்பியன் ரீவ்ஸ், கோலார்.
6. ஸ்ரீ A. J. A. *மார்டின்,*
   தூரிபுஷ்ட சங்கத்தலைவர்,
   தூத்துக்குடி.
7. ஸ்ரீ J. A. *எட்வர்ட், 2-ம் டிவிஷன்,*
   கரைத்தீவு, சிலோன்.

பத்திராதிபர்,
போதனு விஷயப் பூங்கோத்து,
R. C. செகண்டரி போதனுமுறை பாடசாலை,
திருச்சினுப்பள்ளி.

மதிப்புரை

ரம்போலா மாஸ்கரனுஸ் என்பவரால் வெளியிடப்பெற்ற "மாலைப்பாக்கள்" என்னும் நூலைப் பார்வையிட்டோம். தமிழ் இலக்கியம் வரையரையப்படாதுயர்ந்தது என்பது யாவருமறிந்ததே. எனினும் கத்தோலிக்கருக்குரிய செய்யுளிலக்கிய நூல்கள் மிகமிகக் குறைவென்பதை எவரே மறுக்கவல்லார். இங்ஙனமாகவும், சிறிதேயுள்ள செய்யுளிலக்கியங்களும் படிப்பாரற்றுப் புழுவாய்ப்பட்டு நலிவுறுகின்றன. அதற்குப் பல காரணங்களுள :—

1. தேம்பாவணி போன்ற நூல்கள் சிற்றறிவுடையோர் கற்று எளிதினுணர்தற்கியலாதவாறு சற்று உயர்ந்த நடையுடையவாயிருத்தல்; 2. கத்தோலிக்கரின் கவனக்குறைவும், முயற்சியின்மையும்; 3. அரசியலார் ஏனைய மத நூல்களைப் போன்று இந்நூல்களையும் அடிக்கடி அரசியற் பரீக்ஷைக்குரிய பாடங்களாக அமைக்காதிருத்தல்; இவற்றுட் பின்னைய குறைபாடுகள் தனித்த ஒருவரால்மட்டும் தீர்க்கப்படுவனவன்று. முன்னது நுண்ணுணர்வும் பேராராய்ச்சியும் பேரூக்கமுடையார் நீக்குந்தகையதே. மாலைப்பாக்கள் என்னும் இந்நூல் எளிய தெளிந்த நடையுள் இயற்றப்பட்டிருக்கின்றது. மேலும் கற்போர் களிப்புறும்வண்ணமும் அமைந்திருக்கின்றது. உதாரணமாக:

தோத்திரப்பாமாலை யென்னும் பகுதியுள், "மக்கட்கினிய வினம்" என்னும் செய்யுளும் "கோடாத செங்கோலே" என்னும் செய்யுளும் தாயிடத்து மக்கட்குரிய அன்பையும் தமக்குரிய குறையையும் அன்னைக்குள இயற்கையன்பையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. "திருமரிப்பத்து" என்னும் பகுதியுள், "மரியேயென்றழைப்பவர் தம்மனமணக்கும்" என்ற செய்யுள் இயற்கையிலேயே நன்மணமுடைத்தாயிலங்குகின்றதெனல் மிகையாகாது. இங்ஙனமே மற்றப் பகுதிகளும் சிறப்புறுவனவே. சிவனால் எழுதப்பட்ட செய்யுட்கும் குறைகூறினார் நக்கீரர் என்று பெருமை பேசும் மக்கள், இதற்கும் சில கூறுதல் இயல்பே எனினும் "சொல்லுதல் யார்க்குமெளிய அரியவாஞ் சொல்லியவண்ணஞ் செயல்" என்னும் ஆன்றோருரையை மனத்துன்னின் அவர்தம் நாவடங்குமன்றோ?" குணநாடிக் குற்றமுநாடியவற்றுள்,

மிகைநாடி மிக்ககொளு" மாந்தர் இந்நூல் சிறந்ததென்றே கூறுப. இந்நூல் கற்போர்க்குப் பெரும் பயனளிக்கும் என்பதே எமது துணிபு. பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாகக் கத்தோலிக்கரும் இந்நூலையாதரித்து, திரு ரம்போலாவிற்கும் இது போன்ற நூல்களை யியற்றப் புகுவார்க்கும் பேரூக்கமளிப்பார்களென்றே நம்புகின்றோம்.

மீசையால் ஆசிரியர் தற்கொலை

தோல்பூர் எனும் ஊரில் ஓர் வாத்தியார் நீண்ட மீசை வைத்துக்கொண்டிருந்தார். இதைப்பார்த்து அந்த ஊர் மாணவர்கள் ஸ்டாலின்! ஸ்டாலின்! என்று கேலிசெய்தனர். அவர் கேலி பொறுக்கமுடியாமல் உடனே மீசையை சிறியதாக வெட்டிவிட்டுக்கொண்டார். மீசை சிறுக்கவே மறுபடியும் மாணவர்கள் ஹிட்லர் என்று கிண்டல்பண்ணத் தொடங்கினர். இதனால் அவர் மானம் தாங்கமாட்டாமல் ஒருநாள் வீட்டு மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டுவிட்டாராம். இதிலிருந்து நமக்கு இரு சர்வாதிகாரிகளின் பெருமைகளும் மீசையிலேயே அடங்கியிருக்கிறது என்பது விளங்குகிறதல்லவா? அந்தப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்ட வகைக்கே ஒருவர் உயிர் விட வேண்டுமானால் இந்த சர்வாதிகாரிகள் போரில் லக்ஷக்கணக்கான உயிர்களை மாய்ப்பதில் ஆச்சரியம் என்னதானிருக்கிறது.

உபாத்தியாயர்: ஆமைகள் செய்யும் நன்மைகள் யாவை?

ரேத்னம்: நன்மைகளா? ஐயையோ அவைகள் ஒழிந்தாலல்லோ இந்தியாவிற்கு க்ஷேமம். கொடிய விஷ ஜெந்துக்கள்...!!!

உபா.: என்ன, விஷ ஜெந்துக்களா?

ரேத்.: விஷ ஜெந்துக்களாவது நமக்கு நன்மைகள் செய்யலாம். ஆனால் தீண்டாமை, பொறாமை என்னும் ஆமைகளோ!...

* * * *

செல்லம்: மு. டோக்லாக் பாடத்திலிருந்து நீ என்ன அறிந்துகொண்டாய்?

ராஜ்: பெரியபெரிய யோஜனைகள் அடிக்கடி செய்வது உன் வழக்கம். அநேகமாய் வியர்த்தமாய் முடிகின்றன. ஆகையால் நீயும் ஒரு டோக்லாக்தான்!

Kannalaya Hindu Elementary School, Kodapparai

முதலாவது ஆண்டு விழா 1940

தி. வெங்கிடசாமினுர், Manager

27-4-40. இன்று மாலை 4-30 மணிக்கு விழா ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டம் கனம் சங்கரன் கோவில் ரேஞ்சு ஜூனியர் டெப்யூட்டி இன்ஸ்பெக்டரான மகா-ா-ா-ஸ்ரீ M. Ponniah முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. மேலும் தூத்துக்குடி St. Xavier's High School கணித ஆசிரியரான கனம் மகா-ா-ா-ஸ்ரீ P. அருளப்பன், B.A., L.T. அவர்களும், இளையரசனேந்தல் போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் தலைமை ராமநாத அய்யரவர்களும் மற்றும் அப்பாடசாலை உதவி ஆசிரியர்களும், இன்னும் வேறு ஸ்கூல் ஆசிரியர்களும், பெரியோர்களும் கூடியிருந்தனர்.

இன்றையக் கூட்டத்தில் வருஷாந்தர ரிப்போர்ட்டு கிராம பொது ஜனங்களால் வாசிக்கப்பட்டது. உதவி உபாத்தியாயர் சீனிவாசன் அவர்கள் சிரத்தையினால் எம்பாடசாலை மாணவர்களால் கல்வியின் மகத்வம் இன்னதென்பதை விளக்கக்கூடிய ஓர் இனிய சம்பாஷணையை மிகவும் சாமர்த்தியத்துடன் நடப்பித்து காண்பித்தனர். பின்பு தலைவர் அவர்கட்கு பூமாலை சூடப்பட்டது. அதின் பின்பு, தலைவர் அவர்கள் பின்வரும் சாராம்சத்தை விளக்கிக்காட்டினர். கிராம பொது ஜனங்கட்கும் ஆசிரியர்கட்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்றும், கிராமப் பொது ஜனங்கள் மானேஜருக்கும், ஆசிரியர்கட்கும் ஒத்துழைத்தாலொழிய குழந்தைகளின் படிப்பு முன்னேற்றமடையாது. உபாத்தியாயரிடம் குழந்தைகள் ஒருநாளில் 5-மணி நேரமே இருக்கின்றனர். மீதியான 19-மணி நேரமும் அக்குழந்தைகளின்மேலுள்ள பொறுப்பு பெற்றோர்களுடையதேயாகும். ஆகவே பெற்றோர்கள் தங்கள் கடமை இன்னதென்பதை உணர்ந்து தங்கள் தங்கள் குழந்தைகளைப் பாடசாலைக்கு யாதொரு தடங்கலுமின்றி அனுப்பிவருவீர்களேயானால் பாடசாலை முன்னேற்றமடையும், கிராமக் கல்வியும் விர்த்தியடைந்து கிராமமும் முன்னேற்றமடையும் என்பதில் யாதொரு ஐயமில்லை.

இன்னும் பெற்றோர் சங்கம் இன்னதென்பதுபற்றி மிகவும் தெளிவாக எடுத்துக்கூறினர். பிள்ளைகள் சம்பந்தமாக 15 பேர் அடங்கிய ஓர் பஞ்சாயத்து சபையும் ஏற்படுத்தப்பட்டது. இப்பஞ்சாயத்தார்கட்கு ஏற்பட்ட கடமை இன்னதென்பதை மிகவும் தெளிவாக விளக்கிக்காட்டினார்கள். பின்பு ஆசிரியர் கட்கும் பற்பல புத்திமதிகளை விளக்கிக்காட்டினர். சிற்சில சட்டதிட்டங்களையும் எடுத்துக்கூறி உண்மையுடனும் உற்சாகத்துடனும் உழைக்கவேண்டுமென்றும் கூறினர். பின்பு மாணவர்கட்கும் நல்ல புத்திமதிகளை உணர்த்தினர். கடைசியாக மானேஜரவர்கட்குச் சொல்லவேண்டிய விஷயங்களையும் மிகவும் தெளிவுபட எடுத்துக்கூறி தமது அரிய பிரசங்கத்தை முடித்தனர்.

இறுதியாக, கனம் இன்ஸ்பெக்டரவர்கட்கும் மற்றும் விஜயஞ்செய்த ஏனைய ஆசிரியர்கட்கும், கனதனவான்களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்கட்கும், ஹெ ஸ்கூல் தலைமை G. இன்னாசிமுத்து என்பவரால் வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது முடிந்தது. சிற்றுண்டிகளும் அருந்தினர்.

ஆரம்ப ஆசிரியர் யூனியன்

திருப்பத்தூர் தாலூகா (இராமனாதபுரம் ஜில்லா) போர்டு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் யூனியன் பொதுக்கூட்டம் 14—4—40-ல் காரைக்குடியில் S. M. S. ஹைஸ்கூலில் கூடி 1940—41-ம் வருஷத்துக்கு (செவரகோடை ஸ்கூல் டீச்சர்) A. ராமசாமி அம்பலம் அவர்களைத் தலைவராகவும், (கோவிலூர் ஸ்கூல் டீச்சர்) S. அழகரய்யங்கார் அவர்களை காரியதரிசியாகவும், மற்றும் M. ஹரிஹரய்யர், M. C. சுப்பையாபிள்ளை, G. S. மரிய செல்வம், K. வெங்கிட்டராமய்யர், N. வேணுசாமி பிள்ளை, K. S. குருசாமி அய்யர், K. திருவேங்கிடத்தாழ்வார், T. ஸ்ரீநிவாஸய்யங்கார் நிர்வாக கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

முக்கிய தீர்மானங்கள்

1. G. O. 1280 Edn. Dated 6-6-39 உத்திரவை பின்னால் ஒரு உத்திரவு மூலம் எயிடெட் ஸ்கூல் உபாத்தியாயர்

களுக்கு அனுமதி கொடுத்திருப்பதுபோல் போர்டு உபாத்தியா யர்களுக்கும் அனுமதி கொடுக்கும்படிக்கும்,

2. கல்வி இலாகா டைரக்டரவர்கள் பிரொஸிடிங்க்ஸ் R. C. 1493 E/39 Dated 8-6-39 உத்திரவு 5-வது அயிட்டத்தில் செகண்டெரி கிரேடுக்குக் குறைந்த தேர்ச்சியுள்ளவர் ஆங்கிலம்போதிக்க அனுமதிக்கக்கூடாதென்றிருப்பதை கான்ஸல் செய்து கல்வி விதிகளில் சொல்லியபடிக்கும், முன் இருந்தபடிக்கும், 3-வது பாரம் தேறிய ஹையர் கிரேடு சர்ட்டிபிகேட்டுள்ளவர்கள் 4, 5 வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்கலாமென்று உத்திரவளிக்கும்படிக்கும்,

3. செகண்டரி கிரேடு பயின்ற ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளத்தில் நியமகம் செய்யும்படிக்கும்,

4. ஆசிரியர்கோரிய இடத்துக்கு மாற்றுமல் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டால் அவர்களுக்குப் பிரயாணப்படி கொடுக்க வேண்டுமென்றும்,

5. காயமாக உள்ள லோயர் கிரேடு உபாத்தியாயர்களை ஹையர் கிரேடு சர்ட்டிபிகேட்டாக மாற்றிக்கொள்ளாத குறைக்காக வேலையினின்றும் நீக்கப்படாதென்றும்,

6. லோயர் கிரேடு உபாத்தியாயர்களில் 40 வயது ஆனவர்களையும் 15 வருஷம் சர்விஸ் ஆனவர்களையும் ஹையர் கிரேடு பரீக்ஷைக்குப் போகாமலே எக்ஸெம்ப்ஷன் கொடுக்கவேணுமென்றும்,

7. போர்டில் செகண்டெரி கிரேடு ஆசிரியர்களை அதிகமாக ஹையர் கிரேடு ஸ்கேலில் நியமிப்பதால் ஆரம்பப்பாடசாலையையே நம்பியிருக்கும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு சம்பளம் உத்தியோகம் பாதிக்கப்படுவதால் ஆரம்ப பாடசாலையில் செகண்டரி கிரேடுகளை நியமிக்காமல், ஹையர்கிரேடு ஆசிரியர்களையே அதிகமாய் நியமிக்கவேண்டுமென்றும்,

தீர்மானிக்கப்பட்டன.

S. Alagar Iyengar,

23—4—40. *Secretary.*

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182293

ELEMENTS OF ENGLISH GRAMMAR IN TAMIL

(இங்கிலீஷ் இலக்கண நூலாதாரம்)

13th edition, a very useful book for primary classes.

Crown 8vo, 76 pp. Wrapper. As. 4.

Postage: 0-1-3.

FIRST ENGLISH GRAMMAR

By Rev. J. H. Quinn, S.J. 6th Edition. Treats of English words and of the construction of Sentences written mainly for the use of pupils in the I, II and III Forms.

Crown 8vo, 88 pp. Stiff Cover As. 5.

Postage: 0-1-6.

Apply to:—

THE SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

LATIN GRAMMAR

A full course in Latin with portions marked out for the lower and the higher classes, 4th edition, a reprint of the 3rd edition revised by the author himself. Very suitable for use in High Schools, Colleges and Seminaries.

Demy 8vo, XVI-358 pp.; bound in full calico. Rs. 2—8—0.

SMALLER LATIN GRAMMAR

Contains all that is needed in the lower classes. 5th edition.

Demy 8vo, X-169 pp., Limbo bound. Re. 1—0—0.

Exercises on the Latin Grammar

A graduated course of English examples for all the parts of grammar. The author's grammar dispenses of an English-Latin Lexicon, 2nd edition.

Crown 8vo, VIII-138 pp. Wrapper. Re. 0—10—0.

EXERCISES IN TRANSLATION

Three sets of Latin pieces either original or adapted for the use of the three higher forms. All difficult phrases are explained in foot-notes. 2nd revised edition.

Crown 8vo, XII-105 pp. Wrapper. Re. 0—12—0

EPITOME HISTORIÆ SACRÆ

Extracts for the lower classes; 50 pages of Latin text and 58 pages of Latin-English vocabulary. 4th edition, with references to the Grammar.

Crown 8vo, 108 pp. Wrapper. Re. 0—8—0.

☞ **Packing, Registration and Postage extra.**

பங்கிராஸ்

அல்லது
பூர்வீக
சுரங்க
சபை
யின்
விநோத
விர்த்
தாந்தம்

வாசிக்க இனிமை!

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை
சந்தியாகப்பர்
சுவாமியார்
இயற்றியது.

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் கிறீஸ்துவர்கள் சத்தியவேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில் பிரமாணிக்கம் தவறாதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும்.

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.
தபாற் செலவு ரூ. 0—6—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

ஜெஸிட்டாஜ் பெரிஸ்பம்

ஸங்கீதம்!

உலகமே ஸங்கீதம். ஸங்கீத உலகில்
சிறுவர் ஸங்கீதமே சிங்கார ஸங்கீதம்.

எலிமெண்டரி பாடசாலைகளில் ஸங்கீதமும் ஓர்
கட்டாய பாடம்

எமது கத்தோலிக்கு "கர்னாடக ஸங்கீத போதினி" 3 பாகங்கள். ஒவ்வொன்றும் தனி விலை அணா 6.

தபாற்செலவு பிரத்தியேகம்.

துரைத்தனத்தார் அங்கீகரித்தவை

முதல் புத்தகம் ஆரம்ப அப்பியாசகர்களுக்கும், ஸங்கீதம் கற்பிக்கும் உபாத்திமார்களுக்கும், 4, 5-ம் வகுப்புகளுக்கு ஸங்கீதப் பாட திட்டப்படி ஸரளி முதலிய வரிசைகள் கற்பிக்க உதவும்.

மதிப்புரை:—சர்வ வியாபி 30th Oct. 1935.... "........இற்றைவரைக்கும் இவைகள்போன்ற புத்தகங்கள் வெளிவந்ததில்லை என்பது நிச்சயம்.........சிறுவர் சிறுமிகட்கும் சங்கீதத்தில் ஈடுபட்டு பயிற்சிசெய்யவேண்டுமென்று ஆசிக்கிற வாலிபர்கட்கும் முக்கியமாக இயற்றப்பட்டது. தற்காலத்தில் யாவரும் வெகு எளிதில் சங்கீதம் படித்துப் பழகும்விதமாய்த் தகுந்தவண்ணம் சுலபமான இராக தாளங்களில் ஸ்வரங்கள் அமைத்து வெகு தெளிவாயும் விரிவாயும் விளக்கப்பட்டிருக்கிறது.

.........கிறீஸ்துவப் பள்ளிக்கூடங்கள் போர்டிங்குகள், கன்னியர் மடங்கள் முதலிய பொதுஸ்தலங்களில் இப் போதினியை ஓர் டெக்ஸ்டு புத்தகமாகப் பாவித்து வழங்குவது ஓர் சிறந்த காரியமாகும்."

இச் சிறந்த சங்கீதத்தை முற்றும் கைக்கொள்ள ஆசிக்கிறவர்கள் இதைப் படிப்பிக்கும் 3 புத்தகங்களையும் வரவழைப்பதே உத்தமம்.

விலாசம்:— A. ஞானதிக்கம்,
தி ஸௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல்,
செயிண்ட் தாமஸ் சர்ச் ரோடு,
உதகமண்டலம்.
தென் இந்தியா.

புத்தக விளம்பரம்

சென்னை துரைத்தனத்தாரால் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு 1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து தற்கால நவீன முறையில் முதல் ஐந்து வகுப்புகள் வரைக்கும் உபயோகமான தமிழ்-கணக்கு, பூகோளம், இந்துதேச சரித்திரம், தோட்டவேலைகள், ஸிவிக்ஸ் முதலிய புஸ்தகங்கள் என்னால் வெளியிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

புஸ்தகங்கள் கத்தோலிக் ஆசிரியர்களைக்கொண்டு தற்கால பாடத்திட்டத்தை அனுசரித்து வெளிவந்துள்ளன. இன்னும் என்னிடம் உயர்தரக் கலாசாலைகளுக்கு கத்தோலிக் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் புஸ்தகங்கள் வெளிவந்து அநேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக [illegible]க்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பாரங்களுக்குரிய சரித்திரம், [illegible] [illegible]லியனவும் இருக்கின்றன.

புதிய பாடத்திட்டத்தை அனுச[illegible] முதல் ஐந்து வகுப்புகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களின் அட்டவணை

மாணவர் மணிமாலை ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு			
கணக்கு	மூன்றும் வகுப்பு முதல்	5-ம்	,,
ஸிவிக்ஸ்	மூன்றும் ,,	5-ம்	,,
தோட்டவேலை	மூன்றும் ,,	5-ம்	,,
சரித்திரம்	மூன்றும் ,,	5-ம்	,,

பூகோளம் 5-ம் வகுப்புக்குரியது.

விபரமான கேட்லாக் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

கனம் பள்ளிக்கூட மானேஜர்சுவாமி அவர்களும், ஆசிரியர்களும் என்னுடைய பாடப்புத்தகங்களை தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து கத்தோலிக் பிரசுர கர்த்தாவாகிய என்னை ஆதரிக்கும்படியாக மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. V. D. Packiam Pillai,
Educational Publisher,
TUTICORIN.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
தூத்துக்குடி.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.